குறிப்பாக எனக்கு முன் பேசிய அருமை மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். தாம்பரம் போன்ற பகுதிகளில் கல் குவாரி இருக்கின்றது. நெடுங்குன்றம், இரத்தினமங்கலம் போன்ற இடங்களில் கிட்டத்தட்ட கல் உடைக்கும் தொழிலாளர்கள் ஐயாயிரம் பேர்கள் தற்பொழுது வேலையின்றித் தவிக்கிறார்கள். இவ்வளவுதான் கல் உடைக்க வேண்டுமென்று இந்தச் சர்க்கார் ஒரு வரம்பைக் கொண்டு வந்த காரணத்தினால் கல் உடைக்கும் தொழிலாளர்களும், உற்பத்தியாளர்களும் பாதிக்கப்பட்டு, பட்டினிச் சாவு ஏற்படுகின்ற அளவிற்குக் கஷ்டப்படுகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 13—3—1984 காலை 9·00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-34 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

120. தமிழ்நாடு மின் அணு நிறுவனத்தின் 1981-82 ஆம் ஆண்டிற்கான ஐந்தாம் ஆண்டு அறிக்கை (தமிழ், ஆங்கிலம்) (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

எதுவுமில்லை

இணைப்பு.

(26-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 273-க்கான விடையைக் காண்க.)

(அ) சென்னையில் உள்ள கூவம் ஆற்றில் சாக்கடை கலப்பதைத் தடுக்கவும் துர்நாற்றத்தைப் போக்கவும் கீழ்க்கண்ட இலாக்காவினால் சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன—

(1) சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம்.

(2) பொதுப்பணித்துறை.

(3) தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்.

(4) தமிழ்நாடு மின்வாரியம்.